ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2350 - 2023 සැප්තැම්බර් මස 15 වැනි සිකුරාදා 2023.09.15

*2350 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | *832* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் வெற்றிடம்

## வடமத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ், மொழிமூல இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தரத்தின் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளினை இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

*வட மத்திய மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரிய வெற்றிடங்களுக்காக வட மத்திய மாகாண அரசாங்க சேவையில் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கமைவாக இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம் 1 (அ) இற்கு இணைத்துக் கொள்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள வட மத்திய மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

01. *சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலத்திற்காக மாகாண அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க போட்டிப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை அடிப்படையில் நிலவும் ஒவ்வொரு பாட வெற்றிடத்திற்கும் இணங்க தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் இடம் பெறும். காணப்படும் ஒதுக்கீட்டுக்கிணங்க மற்றும் சேவை அவசியத்தின் அடிப்படையில் 2023.06.30 ஆந் திகதி வரை காணப்படும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு நடைபெறும். (வெற்றிடங்கள் பற்றிய விபரங்களுக்கு அட்டவணை 02 ஐப் பார்க்க.)*

02. ***சம்பள அளவுத் திட்டம்*** :
*இப்பதவிக்குரிய மாதாந்த சம்பளம் 2022.01.05 ஆந் திகதி 03/2016(vi) அரசாங்க சுற்றறிக்கையின் GE - 01 - 2016A ஆம் சம்பளத் தொகுதிக்கு உரியதான ரூபா 31,490 - 6X445 - 7X525 - 2X600 - ரூபா 39,035 ஆகும். நீங்கள் இந்த சம்பளத் திட்டத்தின் 14 ஆவது சம்பள நிலையில் (ரூபா 37,835.00) அமர்த்தப்படுவீர்கள். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு அரசினால் காலத்திற்குக் காலம் செலுத்தப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.*

03. ***கல்வி மற்றும் வேறு தகைமைகள்*** :

3.1 *கல்வித் தகைமை -*

i. *விண்ணப்பதாரர்கள் கற்பித்தல் நோக்கங்களிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறப்புத் துறைகளைச் சேர்ந்த பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் பட்டமொன்றைப் பெற்றிருக்க வேண்டும்.*

ii. *கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தவணைகளில் தாய்மொழி மற்றும் கணிதத்தில் சித்திகளோடு மூன்று திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.*

*மிக முக்கியம்.* - *விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.*

- *விண்ணப்பதாரர்கள் தங்கள் பட்டத்திற்கு அமைவாக விண்ணப்பிக்கக் கூடிய பாடங்கள் குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும்.*
- *ஆசிரியர் வெற்றிடங்களிற்கு பட்டப்படிப்பில் பயின்ற முக்கிய பாடம்/ பாடங்களிற்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.*
- *விண்ணப்பித்த பாடம் மற்றும் மொழியை எக்காரணத்திற்காகவும் பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.*

3.2 ***உடல் மற்றும் உளத் தகுதிகள்*** :
*எல்லா விண்ணப்பதாரிகளும் ஆசிரியராகக் கடமையாற்றுவதற்கு உகந்த உடல் மற்றும் உளத் தகுதியுடன் இருத்தல் அவசியம்.*

3.3 ***வயது*** :
*விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் வயது 18 வருடங்களிற்கு குறையாமலும் 35 வருடங்களிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

3.4 ***வேறு தகுதிகள்*** :

i. *விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

ii. *விண்ணப்பதாரி சிறந்த உடலாரோக்கியமுடையவராயிருத்தல் வேண்டும்.*

iii. மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் சேவையாற்ற இயலுமாயிருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பதாரி அல்லது அவரது வாழ்க்கைத் துணை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னரான 03 வருடங்களுக்கு வட மத்திய மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் மூலமாக நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தில் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

04. **சேவை நிபந்தனைகள் :**

4.1 நியமனம் பெறும் பாடசாலையில் 05 வருடங்கள் மற்றும் அப்பாடசாலை உரிய கல்வி வலயத்தில் பாடசாலையில் மேலும் இரண்டு வருடங்கள் சேவை செய்தல் வேண்டும். நியமனம் பெறும் அக்கல்வி வலயத்தின் பாடசாலையொன்றில் 02 வருடங்களாக மொத்தம் 07 வருடங்கள் சேவையின் பின்னர் மாத்திரமே நியமனதாரிக்கு நிலைய மாறுகைக்கு விண்ணப்பிக்க முடியும்.

4.2 அரசாங்க/மாகாண அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளிற்கும், மாகாண அரசாங்க சேவையில் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளிற்கும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் அல்லது இதன் பின் மேற்கொள்ளப்படும் திருத்தங்களிற்குட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 3 தரம் 1(அ) இற்கு நியமிக்கப்படுவர்.

4.3 இந்நியமனம் நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது.

4.4 ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களிற்கு நியமனம் பெறுபவர்கள் கீழ்ப்படிதல் வேண்டும்.

4.5 இப்பதவியில் நியமிக்கப்படுபவர்கள் 03 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படல் வேண்டும்.

4.6 பதவியுயர்வுகள் வடமத்திய மாகாண ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற் கொள்ளப்படும்.

4.7 2020.10.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/ 2020 மற்றும் அவ்வப்போது அதில் செய்யப்பட்ட திருத்தங்களிற்கு இணங்க பரிந்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு :**

5.1 *ஆட்சேர்ப்பு முறை -*

i. 2008.07.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறையில் உள்ள வட மத்திய மாகாண ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.2.4 ஆம் பிரிவின் படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

ii. தேர்வு செய்வதற்காக எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையொன்று நடைபெறும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவோர் அவர்கள் பெறும் புள்ளிகளின் தகைமை வரிசைப்படி ஒவ்வொரு பாடத்திற்கும் மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்களின் மூன்று மடங்கினர் (03) பொதுவான நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

iii. பொதுநேர்முகப் பரீட்சையில் சித்தியடைவோர் செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

iv. எழுத்துப் பரீட்சையிலும் செய்முறைப் பரீட்சையிலும் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

5.2 *எழுத்துப் போட்டிப் பரீட்சை -*
இந்தப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.

| பாடம் | அதிகூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40 |
| 2. பொது அறிவு | 100 | 40 |

பாடத்திட்டம்

பாட இலக்கம் 01 - நுண்ணறிவுப் பரீட்சை

- விண்ணப்பதாரியின் ஆசிரியர் சேவைக்குரிய திறமை, தர்க்கிக்கும் ஆற்றல் தொடர்பான அறிவை அளவிடுவதை நோக்காகக் கொண்டு இவ்வினாப் பத்திரம் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் 50 வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களிற்கும் விடையளித்தல் அவசியம்.

பாட இலக்கம் 02 - பொது அறிவு

- துறைசார்ந்த பொது அறிவினைப் பரீட்சிக்கும் பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கும் வினாக்களைக் கொண்டது.

- தேசிய அளவில் நடைபெற்ற அல்லது நடைபெறும் கல்வித் துறையின் போக்குகள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமாக்கல் தொடர்பான பொது அறிவினைப் பரீட்சிக்கும் வினாக்களைக் கொண்டது. அனைத்து வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும்.

5.3 *பரீட்சை நடைமுறை :*

- இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

- அனைத்து விண்ணப்பதாரிகளும் அனைத்து பாடங்களிற்கும் குறிப்பிட்ட மொழியில் விடையளித்தல் வேண்டும். அம்மொழி தாம் நியமனம் பெறும் மொழியாக இருத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

- அனைத்து விண்ணப்பதாரிகளும் இரு பாடங்களுக்கும் தோற்றுதல் அவசியமாகும்.

- ஆட்சேர்ப்புச் செய்யும் எண்ணிக்கையானது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

5.4 *பொது நேர்முகத் தேர்வு :*

சேவைப் பிரமாணக் குறிப்பின் படி பிரசுரிக்கப்படும் வர்த்தமானி அறிவித்தலில் அல்லது பத்திரிகை விளம்பரத்தில் அல்லது இணையத்தள விளம்பரத்தில் குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா எனப் பரீட்சித்தில் மற்றும் உடல் தகுதியினைப் பரீட்சித்தல்

5.5 *செயன்முறைப் பரீட்சை முறை :*

| தொ. இல. | செயன்முறைப் பரீட்சையில் வழங்கப்படும் நியமங்கள் | அதி கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 01. | குறிக்கோள் மற்றும் பிரவேசம் | 05 |
| 02. | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 |
| 03. | தொடர்பாடல் தெளிவு | 05 |
| 04. | நேர முகாமைத்துவம் | 05 |
| 05. | முன்வைத்தல் நுட்ப முறைகளின் பயன்பாடு | 05 |
| | மொத்த புள்ளிகள் | 25 |

5.6 *செயன்முறைப் பரீட்சை முறை :*

i. செயன்முறைப் பரீட்சைக்காக 05 நிமிடங்களுக்குக் குறையாத காலம் வழங்கப்படும்.

ii. செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகூடிய புள்ளிகள் 25 ஆகும்.

iii. செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு நியமங்களிலும் ஆகக் கூடியது இரண்டு புள்ளிகள் வீதம் பெறல் வேண்டும்.

iv. செயன்முறைப் பரீட்சையின் மதிப்பீடு வட மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் தேர்வுச் சபையினால் மேற்கொள்ளப்படும்.

5.7 *நியமங்களின் குறிக்கோள்கள் :*

i. குறிக்கோள் மற்றும் பிரவேசம்
வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தினை விளக்குதல் மற்றும் பாடப்பிரவேசம் செய்யும் திறமையினை மதிப்பிடல்.

ii. ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு
ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையுடன் காணப்படல் மற்றும் கற்பித்தலில் சிறப்பாக குரலினை பயன்படுத்தும் தன்மை பற்றி மதிப்பிடல்

iii. தொடர்பாடல் தெளிவு
கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் உரிய விடயங்களை உற்பத்தி திறனுள்ள முறையில் தெரிவிக்கும் திறமையினை மதிப்பிடல்

iv. நேர முகாமைத்துவம்
வழங்கப்படும் நேரத்தினுள் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் திறமையினை மதிப்பிடல்

v. முன்வைத்தல் நுட்ப முறைகளின் பயன்பாடு
நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக முன்வைத்தல் நுட்ப முறைகளை சிறப்பாக பயன்படுத்தும் திறமையினை மதிப்பிடல்

06. **பரீட்சைக் கட்டணம் :**
*பரீட்சைக் கட்டணம் 720 ரூபா ஆகும். இக்கட்டணத்தினை விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளில் அல்லது அதற்கு முன்னர் வட மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் வடமத்திய மாகாண வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்து பணமாகச் செலுத்த முடியும். தமது பெயரில் பெறப்பட்ட என். சி. பி. 100 பற்றுச்சீட்டினை அதற்குரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணம் எக்காரணத்திற்காகவும் மீளளிக்கப்படவோ, வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ மாட்டாது. அதே போன்று காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை எதிர்கால பயன்பாட்டிற்காக தம்முடன் வைத்திருத்தல் வேண்டும்.) பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்காக மேல் குறிப்பிட்டுள்ள பிரதேச செயலாளர் அலுவலகத்தினைத் தவிர வேறு மாகாண அலுவலகங்களில் அல்லது வங்கிகளில் அல்லது தபால் நிலையங்களில் செலுத்தப்படும் அல்லது உரிய திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் பற்றுச் சீட்டுடன் கூடிய விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.*

*பரீட்சை மத்திய நிலையம் - இப் பரீட்சை கீழ்வரும் நகரத்தில் நடைபெறும்.*

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| *அநுராதபுரம்* | *01* |

07. **விண்ணப்பிக்கும் முறைமை :**

7.1 *விண்ணப்பப் படிவம் இந்த அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்க விண்ணப்பதாரியினால் தாளின் இரு பக்கங்களையும் பாவித்து A4 அளவிலான தாளில் தயாரித்து தனது எழுத்துக்களினால் பூரணப்படுத்தல் வேண்டும். 1 இலிருந்து 4 வரை தலைப்பு முதலாம் பக்கத்திலிருந்து 5 இருந்து 7 வரை இரண்டாம் பக்கத்திலும்*

ஏனைய தலைப்புக்கள் 3 ஆம் பக்கத்திலும் அமையும் படியாக விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும். என்பதனைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

7.2 குறிப்பிட்ட தகைமைகள் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பம் மற்றும் உரிய மாதிரியில் தயாரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள், கட்டணம் செலுத்தப்படாத மற்றும் உரிய தினத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். அந்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. அது தொடர்பாக முன்னறிவித்தல்கள் ஏதும் செய்யப்பட மாட்டாது.

7.3 பூரணப்படுத்தப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை விண்ணப்பதாரி அருகில் வைத்திருப்பது பயனுடையதாகும்.

7.4 விண்ணப்பிக்கும் பாடம்/ பாடங்கள் ஒரு போதும் மாற்றிக் கொள்ளப்படாததுடன் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பப்படிவத்தினை மாத்திரமே முன்வைக்க முடியும்.

7.5 அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பப் படிவத்தினை தமது நிறுவனத் தலைவரூடாக முன்வைப்பதுடன் இந்த நியமனத்திற்கு தகுதியானவர் எனத் தெரிவு செய்யப்படுமிடத்து அந்த நிறுவனத்திலிருந்து விலக்கமளிப்பதற்கு சம்மதம் என்று உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

7.6 விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலைகளின் அதிபர்கள்/ சமாதான நீதவான்/ சத்திய ஆணையாளர்கள்/ சட்டத்தரணிகள்/ பிரசித்த நொத்தாரிசுகள்/ முப்படை உத்தியோகத்தர்கள் அல்லது அரசின் நிலையான பதவியைக் கொண்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள்/ பொலிஸ் சேவையின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் ஒருவரினால் சான்றுப்படுத்த வேண்டும்.

7.7 சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் 2023.10.13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "செயலாளர், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, வட மத்திய மாகாணம், அநுராதபுரம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் சேவைக்கு பட்டதாரியினை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023" எனவும் விண்ணப்பிக்கும் பாடமும் கண்டிப்பாக குறிப்பிடப்படல் வேண்டும்.

7.8 தபால் மூலமாக விண்ணப்பிக்கையில் விண்ணப்பப் பத்திரம் தொலைந்து போதல் அல்லது காலதாமதமாதல் தொடர்பாக எந்தவொரு குற்றச் சாட்டும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

7.9 சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழிச் சிக்கல்கள் அல்லது ஏதேனும் ஒத்துப்போகாமை என்பன காணப்படுமெனில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவித்தல் சரியானதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

08. **விண்ணப்பதாரிகளினது அடையாளம்** :
விண்ணப்பதாரிகள் தாம் தோற்றிய பரீட்சையில் நேர்முகப்பரீட்சையில், மற்றும் செய்முறைப் பரீட்சையில் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களினூடாக தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

i. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

அல்லது

ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு/சாரதி உறுதிப்பத்திரம்

09. விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்துகையில் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். அத்தகவல்கள் எவ்விதத்திலும் திருத்தத்திற்கு இடமளிக்கப்படமாட்டாது. இந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் குறித்த தினத்தில் பூரணப்படுத்தாமை காரணமாக ஏதேனுமொரு விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு மற்றும் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர் என அறியப்பட்டால் அவை நடாத்தப்படுவதற்கு முன்னர் அல்லது நடாத்தப்படும் போது அல்லது அதன் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரதுவிண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர் பொய்யான தகவல்களை முன்வைத்திருப்பின் அல்லது வேணுமென்றே மறைத்திருப்பது பற்றி தெரிய வருமிடத்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து விலக்குவதற்கு இயலும்.

10. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் ஊகத்தினடிப்படையில் விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சைக்காக அழைப்புக் கடிதம் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அழைப்புக் கடிதம் கிடைத்தவுடன் அதுபற்றிய விபரங்கள் வட மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக வலைத்தளத்தில் (psc.nc.gov.lk) அறிவித்தல் வெளியிடப்படும். நேர்முகப் பரீட்சை அல்லது செய்முறைப் பரீட்சை நடாத்தும் 3 நாட்களுக்கு முன்னர் அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாவிடில் அது பற்றி உடனடியாக “செயலாளர், மாகாண சேவை ஆணைக்குழு, வட மத்திய மாகாணம், அநுராதபுரம்” எனும் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிக்கையில் கீழ்வரும் அனைத்து விபரங்களையும் முன்வைத்தல் வேண்டும்.

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர்
2. சேவை நிலையத்தின் முகவரி
3. தேசிய ஆளடையாள அட்டை
4. தொலைபேசி இலக்கம்

11. விண்ணப்பப்படிவம் கோரப்படும் அறிவித்தலுக்குரிய விடயங்கள் அல்லது அந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது அந்த அறிக்கையில் விதிமுறைகளினை ஆராய்ந்தல்லாது வேறு விடயங்கள் காணப்படுமெனில் அது தொடர்பாக வட மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதாகும்.

12. இப்பரீட்சை, நேர்முகப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை நடாத்துதல், காலம் தாழ்த்துதல், இடைநிறுத்துதல் அல்லது நடாத்திய பின்பு தெரிவு செய்தல்/தெரிவு செய்யாமை அல்லது வெற்றிட எண்ணிக்கை தொடர்பாக இறுதித் தீர்மானம் வட மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைகுழுவினது உரிமையாகும்.

வட மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமத்தின்படி,

செயலாளர்,
வட மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

**அட்டவணை - 01 (கல்வித் தகைமை)**

| சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் | | |
|---|---|---|
| உயர் தரம் | இரசாயனவியல் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியல் தொடர்பான சிறப்புப் பட்டமொன்றையோ அல்லது இரசாயனவியலினை பிரதான பாடமாகக் கொண்டு மூன்று வருட பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். |
| | பௌதீகவியல் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பௌதீகவியல் தொடர்பான சிறப்புப் பட்டமொன்றையோ அல்லது பௌதீகவியலினை பிரதான பாடமாகக் கொண்டு மூன்று வருட பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். |
| | உயிரியல் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தாவரவியல்/ விலங்கியல்/ உயிரியல் தொடர்பான சிறப்புப் பட்டமொன்றையோ அல்லது தாவரவியல்/ விலங்கியல்/உயிரியல் என்பவற்றில் எதையேனும் முதன்மைப் பாடமாகக் கொண்டு மூன்று வருட பொதுப் பட்டப்படிப்பையோ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>க. பொ. த. (உ/த) பரீட்சையில் கீழ்க் காணப்படும் 03 பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>• பௌதீகவியல்<br>• இரசாயனவியல்<br>• உயிரியல்/தாவரவியல்/விலங்கியல் ஆகிய 03 இல் ஏதேனும் ஒன்று |
| | விவசாய விஞ்ஞானம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாய விஞ்ஞானம் தொடர்பான சிறப்புப் பட்டமொன்றையோ அல்லது விவசாய விஞ்ஞானத்தினை பிரதான பாடமாகக் கொண்டு மூன்று வருட பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல்.<br>க.பொ.த. (உ/த) பரீட்சையில் கீழ்க் காணப்படும் 03 பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைத்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>பௌதீகவியல்<br>இரசாயனவியல்<br>விவசாய விஞ்ஞானம் |

| | | |
|---|---|---|
| உயர் தரம் | இணைந்த கணிதம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தூய கணிதம்/பிரயோக கணிதம் தொடர்பாக விஷேட பட்டப்படிப்பினை அல்லது பொதுப்பட்டப்படிப்பினை பூர்த்தி செய்திருத்தல். |
| | பொறியியல் தொழில் நுட்பம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொறியியல் விஞ்ஞானம்/சிவில்/ மின்/ இலத்திரனியல்/ இயந்திரம்) பாடமாக விஷேட பட்டப்படிப்பினை அல்லது பொதுப் பட்டப்படிப்பையோ பூர்த்தி செய்திருத்தல்.<br>தேசிய தொழில் நுட்ப கற்கைகள் 4 வருட பாடநெறி (நிர்மாணம்) (NDT) பொறியியல் விஞ்ஞானம் தொடர்பாக 4 வருட தேசிய பாடநெறி (கட்டிட நிர்மாணம்) (NDEC) அல்லது கட்டிட நிர்மாணம் தொடர்பாக உயர் தேசிய 4 வருட கால பாடநெறி (சிவில்) (HNDE) பெற்றிருத்தல் |
| | உயிர் முறைமைகள் தொழில்நுட்ப வியல் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாய விஞ்ஞானம் தொடர்பான சிறப்புப் பட்டமொன்றையோ அல்லது மூன்று வருட பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல் |
| | தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தூய கணிதம்/பிரயோக கணிதம்/ பௌதீகவியல்/இரசாயனவியல் தொடர்பான சிறப்புப் பட்டமொன்றையோன மூன்று வருட பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல் |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானம் தொடர்பான சிறப்புப் பட்டமொன்றையோ அல்லது பிரதான பாடமாகக் கொண்டு மூன்று வருட பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல் |
| | ஜப்பான் மொழி | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் ஜப்பான் மொழி பிரதான பாடமாகக் கொண்டு சிறப்புப் பட்டமொன்றையோ மூன்று வருட பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். |

*13. வருட சான்றுப்படுத்தப்பட்ட கல்வி செயற்திட்டம் (தொழிற் கல்வி) சிங்கள, தமிழ் மொழி மூலத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்தல்.*

| *தொ. இல.* | *பாடம்* | *தகைமை* |
|---|---|---|
| *1.* | Child Psychology and care<br>குழந்தை உளவியல் மற்றும் கவனிப்பு | குழந்தை உளவியல் விஞ்ஞானத்தினைப் பாடமாகக் கொண்ட பட்டப்படிப்பு அல்லது குழந்தை உளவியல் மற்றும் கவனிப்பினைப் பாடமாகக் கொண்ட பட்டப்படிப்பு |
| *2.* | Health and Social care<br>சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு | சுகாதார அபிவிருத்தி விஞ்ஞான பட்டம் அல்லது சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு பாடத்தினை பிரதானமாகக் கொண்ட பட்டப்படிப்பு |
| *3.* | Performing Arts<br>நாட்டியக் கலை | நாட்டியக் கலை தொடர்பான விஷேட பட்டப்படிப்பு அல்லது கலை (விசேட) பிரசங்கக் கலை (விஷேட) பிரசங்கக்கலை பட்டம் அல்லது நாட்டியம் அல்லது நடனக் கலை தொடர்பான விஷேட பட்டம் அல்லது பிரசங்கக் கலையினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| *4.* | Event Management<br>நிகழ்ச்சி மேலாண்மை | வரவேற்பு உபசரணை, சுற்றுலா வியாபாரம் மற்றும் நிகழ்ச்சி தொடர்பான முகாமைத்துவ பட்டம் அல்லது செயல் நிகழ்ச்சி முகாமைத்துவத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| *5.* | Arts and Crafts<br>கலை மற்றும் கைவினை | நோக்குக் கலை விஷேட பட்டம் (சித்திரக் கலை) அல்லது நோக்குக் கலை மற்றும் திட்டமிடல் (சித்திரம் மற்றும் க்ரெபிக்) அல்லது நோக்குக் கலை தொழில் நுட்ப கலை பட்டம் அல்லது சிற்பக் கலையில் பட்டம் அல்லது கலை மற்றும் கைவினையினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| *6.* | Interior Designing<br>உள்துறை வடிவமைப்பு | நிர்மாணதாரர் பட்டம் அல்லது உள்துறை வடிவமைப்பினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |

| தொ. இல. | பாடம் | தகைமை |
|---|---|---|
| 7. | Fashion Designing<br>பேஷன் டிசைனிங் | நிர்மாணதாரர் பட்டம் அல்லது நோக்குக் கலை விஷேட பட்டம் (ஆடை மற்றும் அணிகலன் கலை) அல்லது புதிய நிர்மாணம் மற்றும் தயாரிப்பு அபிவிருத்தி தொடர்பான பாடத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| 8. | Graphic Designing<br>கிராஃபிக் டிசைனிங் | நிர்மாணப் பட்டப்படிப்பு அல்லது நோக்குக் கலை மற்றும் திட்டமிடல் தொடர்பான கலைமாணி பட்டம் (சித்திரம் மற்றும் கிரெபிக்) அல்லது கணினி பொறியியல் கலை தொடர்பான பொறியியல் விஞ்ஞான பட்டம் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் பற்றிய விஞ்ஞான விஷேட பட்டம் அல்லது தகவல் மற்றும் தொடர்பாடல் பட்டம் அல்லது பட்டத்தினை பிரதான பாடமாகக் கொண்ட தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில் நுட்ப பாடம் உள்ளடங்கியதாக பட்டம் அல்லது கணினி விஞ்ஞான பாடம் உள்ளடங்கியதாக விஞ்ஞானி பட்டம் அல்லது க்ரெபிக் நிர்மாணத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 9. | Landscaping<br>இயற்கையை ரசித்தல் | விவசாயம் தொடர்பான விஷேட பட்டம் (தோட்ட விஞ்ஞான விஷேட பட்டப்படிப்புடன்) அல்லது தோட்ட விஞ்ஞானம், பூந் தோட்டம் மற்றும் பூமிக் காட்சி நிர்மாணத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| 10. | Applied Horticultural Studies<br>பயன்பாட்டு தோட்டக் கலை ஆய்வுகள் | விவசாயம் தொடர்பான விஞ்ஞான விஷேட பட்டம் (தோட்ட விஞ்ஞானம் விஷேட) உடன் அல்லது தோட்ட விஞ்ஞானம், பூந் தோட்டம் மற்றும் பூமிக் காட்சி நிர்மாணத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| 11. | Livestock Product Studio<br>கால்நடை தயாரிப்பு ஆய்வுகள் | விவசாயம் தொடர்பான விஞ்ஞான விஷேட பட்டம் (கால்நடை விஞ்ஞானம் விஷேட பட்டத்துடன்) அல்லது கால்நடை கட்டுப்பாடு மற்றும் மீன் வளர்ப்பு விஞ்ஞானம் தொடர்பான முதன்மைப் பட்டம் அல்லது விலங்குக் கட்டுப்பாடு தொடர்பான விஞ்ஞான பட்டம் அல்லது வளத்தயாரிப்பு தொழில் நுட்பத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| 12. | Food Processing Studies<br>உணவு பதப்படுத்துதல் ஆய்வுகள் | விவசாயம் தொடர்பான விஷேட பட்டம் (உணவுத் தொழில் நுட்பத்துடன்) அல்லது உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் தொடர்பான முதன்மைப் பட்டம் அல்லது உணவு விஞ்ஞானம் மற்றும் போஷாக்கு தொடர்பான முதன்மைப் பட்டம் அல்லது உணவு உற்பத்தி தொழில் நுட்பம் அல்லது உணவு பொதியிடல் தொழில் நுட்ப பட்டம் |
| 13. | Plantation Product Studies<br>தோட்ட தயாரிப்பு ஆய்வுகள் | விவசாயம் தொடர்பான விஞ்ஞான விஷேட பட்டம் அல்லது ஏற்றுமதி விவசாயம் தொடர்பான முதன்மைப் பட்டம் அல்லது வர்த்தகப் பயிர் உற்பத்தி தொழில் நுட்பத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| 14. | Construction Studies<br>கட்டுமான ஆய்வுகள் | சிவில் பொறியியல் கலை தொடர்பான பொறியியல் விஞ்ஞானி பட்டம் அல்லது கட்டுமாண மற்றும் கட்டிட சேவை தொழில் நுட்பம் உள்ளடங்கலாக பொறியியல் தொழிநுட்ப பட்டம் அல்லது தொழில் நுட்பவியலாளர் பட்டம் அல்லது கட்டுமாணத் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாகக் கொண்டு பெற்ற பட்டம் |
| 15. | Automobile Studies<br>ஆட்டோ மொபைல் ஆய்வுகள் | தொழில் நுட்பவியலாளர் பட்டம் (மோட்டார் இயந்திர) அல்லது விஞ்ஞான பொறியியல் (மோட்டார் இயந்திர) பட்டம் அல்லது மோட்டார் இயந்திர தொழில் நுட்பத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம். |
| 16. | Electrical and Elec tronic Studies<br>மின் மற்றும் மின்னணு ஆய்வுகள் | மின் மற்றும் மின்னஞ்சல் பொறியியல் தொடர்பான பொறியியல் விஞ்ஞானத்தின் பட்டம் அல்லது பொறியியல் தொழில்நுட்பம் பட்டம் அல்லது இலத்திரனியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானி விஷேட பட்டம் அல்லது மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாகக் கொண்டு பெற்ற பட்டம் |
| 17. | Textile and Apparel Studies<br>ஜவுளி மற்றும் ஆடை ஆய்வுகள் | நிர்மாணதாரர் பட்டம் அல்லது ஆடைத்தொழில் மற்றும் துணிகள் பற்றிய பொறியியல் பிரதான பட்டம் அல்லது தொழில்நுட்பவியல் பட்டம் அல்லது ஆடை மற்றும் துணி தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| 18. | Metal Fabrication Studies<br>மெட்டல் பெப்ரிகேஷன் | தொழில்நுட்பவியலாளர் பட்டம் இயந்திர (பொது) அல்லது இயந்திர தொழில்நுட்பவியல் (பொது) பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது உலோக உற்பத்தி தொழில் நுட்பத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |

| தொ. இல. | பாடம் | தகைமை |
|---|---|---|
| 19. | Aluminium Fabrication Studies<br>அலுமினியம் பற்றிய ஆய்வுகள் | தொழில்நுட்பவியலாளர் பட்டம் இயந்திர (பொது) அல்லது தொழில்நுட்பவியலாளர் பட்டம் சிவில் (கட்டுமாணம்) அல்லது அலுமினியம் தயாரிப்பு தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| 20. | Computer Hardware and Networking? (web designing and software Development<br>கணினி வன்பொருள் மற்றும் நெட் வொர்க்கிங்? (வலை வடிவமைப்பு மற்றும் மென்பொருள் மேம்பாடு) | கணினிப் பொறியியல் துறை தொடர்பான பொறியியல் விஞ்ஞானி பட்டம் மற்றும் கணினி விஞ்ஞானம் தொடர்பான விஷேட பட்டம் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞானி பட்டம் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது தொடர்பாடல் தொழில்நுட்பம் பட்டம் அல்லது மென்பொருள் பொறியியலினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| 21. | Manufacturing<br>உற்பத்தி | மூன்று வருட காலத்தினைக் கொண்ட இயந்திர பொறியியலாளர் பட்டம் |
| 22. | Tourism and Hospitality<br>சுற்றுலா மற்றும் விருந் தோம்பல் | வரவேற்பு உபசரனை மற்றும் ஓய்வு முகாமைத்துவம் தொடர்பான நிர்வாகம் அல்லது விஞ்ஞான முகாமைத்துவம் தொடர்பான விஷேட பட்டம் அல்லது வரவேற்பு உபசரணை சுற்றுலா வியாபார நிகழ்வு தொடர்பான முகாமைத்துவ பட்டம் அல்லது சுற்றுலா (முகாமைத்துவம் பட்டம் அல்லது சுற்றுலா மற்றும் வரவேற்பு உபசரணையினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் |
| வேறு | | |
| 23. | விஷேட கல்வி | ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனுமொரு பட்டத்தினைப்பூர்த்தி செய்திருத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்தில் விஷேட கல்வி தொடர்பாக ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் |

**அட்டவணை - 02**

வடமத்திய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை

| தொ. இல. | பாடம் | வடமத்திய மாகாணம் | |
|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
| 01. | இரசாயனவியல் | - | 2 |
| 02. | பௌதீகவியல் | 12 | 4 |
| 03. | உயிரியல் | 5 | 2 |
| 04. | விவசாய விஞ்ஞானம் | 2 | - |
| 05. | இணைந்த கணிதம் | 4 | 2 |
| 06. | பொறியியல் தொழில்நுட்பம் | 2 | 1 |
| 07. | உயிர் முறைமைகள் தொழில் நுட்பவியல் | 6 | 1 |
| 08. | தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம் | 11 | 3 |
| 09. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் | - | 3 |
| 10. | ஜப்பான் மொழி | 1 | - |
| 11. | குழந்தை உளவியல் மற்றும் கவனிப்பு | 3 | - |
| 12. | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | 1 | - |
| 13. | நாட்டியக் கலை | 1 | - |

| தொ. இல. | பாடம் | வடமத்திய மாகாணம் | |
|---|---|---|---|
| | | சிங்கள மொழி மூலம் | தமிழ் மொழி மூலம் |
| 14. | நிகழ்ச்சி மேலாண்மை | 4 | - |
| 15. | கலை மற்றும் கைவினை | 2 | - |
| 16. | உள்துறை வடிவமைப்பு | 2 | - |
| 17. | பேஷன் டிசைனிங் | 5 | - |
| 18. | கிராஃபிக் டிசைனிங் | 3 | - |
| 19. | இயற்கையை ரசித்தல் | 3 | - |
| 20. | பயன்பாட்டு தோட்டக்கலை ஆய்வுகள் | 3 | - |
| 21. | கால்நடை தயாரிப்பு ஆய்வுகள் | 4 | - |
| 22. | உணவு பதப்படுத்துதல் ஆய்வுகள் | 10 | - |
| 23. | தோட்ட தயாரிப்பு ஆய்வுகள் | 1 | - |
| 24. | கட்டுமான ஆய்வுகள் | 13 | - |
| 25. | ஆட்டோமொபைல் ஆய்வுகள் | 9 | - |
| 26. | மின் மற்றும் மின்னணு ஆய்வுகள் | 8 | 1 |
| 27. | ஜவுளி மற்றும் ஆடை ஆய்வுகள் | 4 | - |
| 28. | மெட்டல் பெப்ரிகேஷன் | 4 | - |
| 29. | அலுமினியம் பற்றிய ஆய்வுகள் | 6 | - |
| 30. | கணினி வன்பொருள் மற்றும் வெட்வொர்க்கிங்? (வலை வடிவமைப்பு மற்றும் மென்பொருள் மேம்பாடு) | 8 | - |
| 31. | உற்பத்தி | 2 | - |
| 32. | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | 8 | 1 |
| 33. | விஷேட கல்வி | 25 | 2 |
| | மொத்தம் | 172 | 22 |

**மாதிரி விண்ணப்பம்**

இணைப்பு 2

| |
|---|
| |

அலுவலக பாவனைக்காக

**வட மத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மொழிமூல இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பின் 1 (அ) தரத்தின் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளினை இணைத்துக் கொள்ளல்**

| விண்ணப்பிக்கும் பாட இல. | விண்ணப்பிக்கும் பாடம் | முன்னுரிமை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

**(வெற்றிட ஆவணத்திற்கிணங்க பூரணப்படுத்துக. அதிக முன்னுரிமை வழங்க வேண்டியதை 01 எனவும் ஏனையவற்றில் முன்னுரிமை வழங்க வேண்டியவற்றை தொடராகவும் இலக்கமிடுக)**

வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்கும் மொழி மூலம் - சிங்களம், தமிழ்

நிலையான வதிவிடம் : மாகாணம் : ........................................................ மாவட்டம் : ....................................................

1. 1.1 முதலெழுத்துக்களை கடைசியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில் : உதாரணம் - PERERA A. B)
.......................................................................................................................................................................

1.2 முதலெழுத்துக்களினால் அறியப்படும் பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ....................................
.......................................................................................................................................................................

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) : .......................................................................................................................

2. தற்போதைய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : .............................................................................

2.1 நிலையான வதவிடத்தின் பிரதேச செயலாளர் பிரிவு : ..........................................................................................

2.2 கிராம அலுவலரின் பிரிவு : ..................................................................................................................

3. 3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : .................................................................................................................

3.2 பிறந்த திகதி : .........................................................................

3.3 2023.10.13 ஆந் திகதிக்கு வயது : .............................................................................

3.4 ஆண்/பெண் நிலை : ......................................................................

3.5 திருமணமானவர்/திருமணமாகாதவர் : ..............................................................................

3.6 தொலைபேசி இல. : ..............................................................................

4. பட்டப்படிப்பு பற்றிய விபரம் : ...........................................................................................

4.1 பட்டப்படிப்பின் பெயர் : ....................................................................................................................

4.2 மொழி மூலம் : ............................................................................................................................

4.3 பல்கலைக் கழகத்தின் அல்லது உரிய நிறுவனத்தின் பெயர் : ....................................................................................

4.4 பட்டம் செல்லுபடியாகும் திகதி : .....................................................................................

4.5 பட்டத்தினை மேற்கொண்டுள்ள பிரதான பாடம்/பாடங்கள் (ஆங்கிலத்தில்) பட்டச் சான்றிதழின் மற்றும் பெறுபேற்றுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட வேண்டிய பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.) : .............................................
.
.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

5. 5.1 க. பொ. த. (உ/த) பரீட்சை (பெறுபேறு ஆவணங்கள் தம்மால் சான்றுப்படுத்தப்பட்டு நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். அவை இல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.) : ..................................................................
.........................................................................

5.2 பரீட்சை சுட்டெண் மற்றும் வருடம் : ..........................

| பாடம் | பெற்றுக்கொண்ட பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |

6. க. பொ. த. (சா.த.) பரீட்சை (பெறுபேறு ஆவணங்களில் தன்னால் சான்றுபடுத்தப்பட்டு நிழற்பிரதிகளை இணைத்தல் வேண்டும். அந்த ஆவணங்களில் அவை இல்லாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்).

6.1 முதலாம் தடவை

பரீட்சை வருடம் ............................ பரீட்சை இல. ............................

| | பாடம் | பெறுபேறு | | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|---|---|
| 01. | | | 06. | | |
| 02. | | | 07. | | |
| 03. | | | 08. | | |
| 04. | | | 09. | | |
| 05. | | | 10. | | |

(விருப்பப் பாடங்கள் உள்ளடக்க வேண்டிய அவசியமில்லை)

7. விண்ணப்பதாரியின் சான்று

7.1 இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கின்றேன். இதில் ஏதேனும் பகுதி பூரணப்படுத்தப்படாமல் அல்லது/தவறாக பூரணப் படுத்தப்பட்டு/பிழையாக பூர்த்தி செய்யப்பட்டு இருக்குமெனின் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

7.2 இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின்பு அல்லது தகைமையற்றவர் என்பது தெரியவந்தால் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை அறிவேன்.

7.3 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் நான் இணங்குகின்றேன்.

7.4 செய்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட புள்ளிகள் திறமையினை கோரும் பாடசாலைக்கு நியமிப்பதற்கு பற்றாக்குறையாக இருக்கும் சந்தர்ப்பங்களில் மாகாணத்தின் எந்தவொரு பாடசாலையிலும் நியமனத்தை ஏற்றுக்கொள்ள இணங்குகின்றேன்/இணங்கவில்லை.

........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ........................................................

8. பணம் செலுத்திய பற்றுச் சீட்டினை இங்கே ஒட்டவும்

8.1 பணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவு : ........................................................................................

8.2 செலுத்திய திகதி : ........................................................................................

8.3 பற்றுச்சீட்டு இல. : ........................................................................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை கழறாதவண்ணம் இங்கு ஒட்டவும் |

9. கையொப்பத்தினை சான்றுப்படுத்துதல் :

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி .......................................................................... நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் .......................................... ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

.........................................................
கையொப்பத்தினை சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி : .................................................
சான்றுப்படுத்திய உத்தியோகத்தரது முழுப் பெயர் : .........................................................
பதவி முகவரி : .........................................................
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்துக) : .........................................................

10. விண்ணப்பதாரி மத்திய அரசின் அல்லது மாகாண அரசாங்க சேவை ஊழியர் எனில் அமைச்சு/திணைக்கள/நிறுவன பிரதானியினது சான்றிதழ்

இவ்விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .......................... ஆக நிரந்தர/தற்காலிக/வேறு ஊழியராக சேவையாற்றுவதாகவும், அவர் இந்தப் பதவிக்காக தெரிவு செய்யப்படுமிடத்து தற்போதைய பதவியிலிருந்து விலக்களிக்கப்பட முடியும்/முடியாது எனவும் அறியத் தருகின்றேன்.

.........................................................
நிறுவனப் பிரதானியினது கையொப்பம்.
(பதவி முத்திரை)

பெயர் : .........................................................
பதவி : .........................................................
முகவரி : .........................................................
திகதி : .........................................................

09 - 300